ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம்
தென்னாசியாவுக்கான பிராந்திய
அலுவலகம்.

# கிராமத்தில் அறிமுகமில்லாதவர்கள்



For every child
Health, Education, Equality, Protection
ADVANCE HUMANITY

unicef



மீனா எனப்படும் சிறுமி, தனது பெற்றோருடனும் பாட்டியுடனும் சகோதரன் ராஜீவுடனும் தங்கையான குழந்தை ராணியுடனும் கிராமமொன்றில் வாழ்ந்து வருகிறாள். மித்து எனப்படும் கிளி மீனாவின் நெருங்கிய தோழியாகும்.

மீனா பலவழிகளிலும் உங்களுக்குத் தெரிந்த ஏனைய சிறுமிகளைப் போன்றே இருப்பாள். அவள் நட்புடன் பழகுவாள் ஆயினும் வினாக்களைக் கேட்பதற்கு பயப்படமாட்டாள்.

மீனா சிரிக்கும்போது, மரங்களில் ஏறும்போது, வினாக்களைக் கேட்கும் போது, பிரச்சினைகளுக்கு தீர்வு காணு ம் போது, சிறுமியொருவளினால் செய்யக் கூடிய அனைத்தையும் காட்டும் போது அவளது தீரச் செயல்களில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள்.


| | |
|---|---|
| கதை வசனம்: | நு ஷாட் ஷஷாடி |
| மூல எண்ணக்கரு: | நீல் மக்கீ |
| ஆக்கக் குழு: | றேச்சல் கறெஞ்சி<br>சுரங்கனி பசனாயக்கா<br>தீபா பால்சவார்<br>மீரா அக்னி<br>றேணு கோஷ்<br>சுலைமான் மாலிக்<br>டினிற்ரா சப்பாகெயின்<br>ஹர்ஷா மெத்தா<br>சுசன் ஏயிற்கின்<br>லிமியா தேவான் |
| சித்திர விருத்தியும் பாத்திர வடிவமைப்பும் ஆய்வு | ராம் மோஹறன்<br>கலாநிதி<br>மீரா அக்கி<br>பங்களாதேஷ், நேபாளம், இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆய்வு குழுக்களுடன். |
| நகைச்சுவை நு ால் தழுவல் | தீபா பால்சவார்<br>ஹர்சா மேத்தா |
| ஆக்க வழிகாட்டலும் செயற்திட்ட முகாமைத்துவமும் | நு ஹாட் ஷஷாடி<br>UNICEF – ROSA |

நோர்வே அரசின் உதவியுடன் தயாரிக்கப்பட்டது.

ஒரு நாள் அதிகாலை மீனாவின் கிளியான மித்து கிராமத்தின் எல்லையை நோக்கி அறிமுகமில்லாத ஒரு குழுவினர் களைப்புடன் நடந்து வருவதைக் கண்டது.



மித்து உறங்கிக் கொண்டிருக்கும் மீனாவையும் அவளின் சகோதரனான ராஜுவையும் எழுப்புகிறது. மித்து எதற்காகப் பதற்றப்படுகிறதென்பதை அறிவதற்கு பிள்ளைகள் அதனைப் பின் தொடர்ந்தனர்.



நீர்ப்பம்பியருகே சிறுமியொருவள் காணப்பட்டாள். சடுதியாக மனிதனொருவன் வெளியே வந்து அவளை அழைத்துச் சென்றான்.



மீனாவும் ராஜூவும் மித்துவும் அமைதியாக மாலா என்ற அச்சிறுமியையும் அவளின் தகப்பனையும் பின் தொடர்ந்தனர். வரம்புக்கு அப்பால் அறிமுகமில்லாத ஒரு குழுவினர் முகாமொன்றை அமைப்பதைக் கண்டனர்.



மீனாவும் ராஜூவும் அதிர்ச்சியடைந்தனர். மக்கள் பயத்துடனும் களைப்படைந்தும் காணப்பட்டனர். சிலர் காயமடைந்து வலியுடன் தென்பட்டனர்.



மீனாவும் ராஜுவும் வீட்டுக்கு விரைந்தனர். அவர்களின் ஆசிரியை குடும்பத்தினருடன் இருக்கின்றார். பிள்ளைகள் பார்த்தவற்றை விபரிக்கும் போது அனைவரும் அமைதியாக செவிமடுத்தனர்.



தகப்பனார் தொலைவிலுள்ள கிராமமொன்றில் பிரச்சினை நடந்ததாக அறிந்திருந்தார். எக்காரணத்துக்காக மக்கள் தங்களுடைய வீடுகளை விட்டு வெளியேறினார்களென்பதை அறிவதற்கு மீனா விரும்பினாள்.



இம்மக்களையிட்டு எல்லோரும் மிகவும் கவலைப்பட்டார்கள்.



பின்பு மீனா மீண்டும் மாலாவைச் சந்தித்தாள். கடைக்காரன் அவளுக்கு நெருப்புப் பெட்டியை விற்பதற்கு மறுத்தான். புதிதாகக் குடியேறியவர்கள் மீது அவனுக்கு நம்பிக்கையில்லாததுடன், தனது கிராமத்தில் அம்மாதிரியான எவரேனும் இருப்பதை அவன் விரும்பவில்லை.



மீனா பணத்தை மாலாவிடமிருந்து பெற்றுக் கொண்டு நெருப்புப் பெட்டியை வாங்கினாள். மீனா இவ்வாறு செய்ததையிட்டு கடைக்காரன் ஆத்திரமடைந்தான். அச்சிறுமிகள் நண்பர்களாயினர்.





அடுத்த நாள் பாடசாலை முடிவடைந்ததும் மீனாவும் ராஜீவும் புதிதாக வந்துள்ள பிள்ளைகளைச் சந்திக்கச் சென்றனர். மாலா தனது கிராமத்தில் இடம் பெற்ற மோசமான சண்டை பற்றி அவர்களுக்குக் கூறினாள்.



சில கெட்ட நபர்கள் இரவு நேரத்தில் மாலாவின் கிராமத்தை தாக்கியிருந்தனர். அங்கு துவக்குச் சூடும் இடம் பெற்றது. வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டன.

அது இரவு நேரம். மக்கள் தமது உயிரைக் காப்பாற்றுவதற்காக ஓடினர். மாலாவின் பாட்டியும் காணாமற் போய் விட்டார்.



மாலாவின் உற்ற நண்பியும் காணாமற் போய்விட்டாள். மாலா அழத் தொடங்கிய போது மீனா அவளுக்கு ஆறுதல் கூறினாள்.



மீனாவும் ராஜீவும் வீடு திரும்பிய போது ஆத்திரமுற்ற அயலவர்கள் புதிதாக குடியேறியவர்களைப் பற்றிக் கதைப்பதைக் கேட்டனர்.



தாயாரும், பாட்டியும் ஆசிரியையும் எல்லோரையும் அமைதியாக இருக்க செய்வதற்கு முயற்சித்தனர்.



ஆசிரியையும் சுகாதாரப் பணியாளரும் குடியேறியவர்களைச் சந்தித்தனர். அடுத்த நாள் மீனா பாடசாலைக்கு வந்தபோது அவளுக்காக ஆச்சரியமொன்று காத்திருந்தது.



முகாமிலிருந்து வந்த பிள்ளைகளைப் பார்த்த மீனாவின் நண்பர்கள் மகிழ்ச்சியற்றுக் காணப்பட்டனர். தமது பெற்றோர்கள் குடியேறியவர்களைப்பற்றி சீறிய மோசமான விடயங்களை அவர்கள் கேள்விப்பட்டிருந்தனர்.





பாவம் மீனா! அவள் மாலாவை விரும்பியிருந்ததுடன் அவளது நண்பியாகவும் இருக்கப் போவதாக வாக்களித்திருந்தாள். வகுப்பில் மாலாவுக்கு அருகில் இருக்கப் போவதாகவும் மீனா முடிவு செய்திருந்தாள்.

பாடசாலை முடிவடைந்ததும் மீனாவின் நண்பர்கள் மீண்டும் அவளை எச்சரிக்கை செய்தனர். அவளும் மாலாவும் விடை பெற்றுக் கொள்ளும் போது அவளுக்கு கவலையாகவும் யோசனையாகவுமிருந்தது



அன்று காலை மீனாவின் நண்பர்கள் அவளைக் கூட்டிச் செல்ல வந்தனர். அவர்கள் மாலாவை தனியே விட்டுவிட்டு மீனாவை கூட்டிச் சென்றனர். மீனாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.





மாலாவின் மனதைப் புண்படுத்தியதையிட்டு மீனா மிகவும் கவலைப்பட்டாள். மாலா மிகவும் கலக்கமடைந்ததுடன், அவள் மீனாவைப் பார்க்கவேயில்லை.

அடுத்த நாள் முகாமைச் சேர்ந்த பிள்ளைகள் ஒருவருமே பாடசாலைக்கு வரவில்லை. மாலாவின் நண்பியாக இருக்கப்போவதாக வாக்குறுதியளித்ததையிட்டு மீனா மிகவும் கவலையடைந்தாள். என்ன நடந்ததென்று ஆசிரியை அறிந்திருந்தார்போல் தோன்றியது.



வீட்டில் கிராமவாசிகள் குடியேறியவர்களைப் பற்றி மீண்டும் கலந்துரையாடினார்கள். முகாமுக்குச் சென்று பார்ப்பதற்கு காலம் வந்துவிட்டதென அவர்கள் தீர்மானித்தனர்.



அன்று பின்னேரம் கிராம உத்தியோகத்தர் முகாமை நோக்கி கிராமவாசிகளின் குழுவொன்றுக்கு தலைமை தாங்கிச் சென்றார். மீனாவும் மாலாவைச் சந்திக்க விரும்பியமையால் அவளும் அக்குழுவுடன் சேர்ந்து கொண்டாள். கிராமவாசிகளின் பெரிய கூட்டமொன்று முகாமை அண்மித்து வருவதையிட்டு சிறுவனொருவன் பயந்து விட்டான்.





கிராமவாசிகளும் குடியேறியவர்களும் முதல் முறையாக நேருக்கு நேர் சந்தித்தனர். குடியேறியவர்கள் கவலையோடு காணப்பட்டனர். எல்லோரும் மிக்க பதற்றமடைந்திருந்தனர். ஒருவருமே பேசவில்லை.

சடுதியாக மாலா கூட்டத்தினூடாக வெளியே வந்தாள். அவளை நோக்கி மீனா ஓடிச்சென்றாள். அச்சிறுமிகள் ஒருவருக்கொருவர் வணக்கம் தெரிவித்துக்கொண்டனர். பதற்றம் நீங்கியது.



இப்பொழுது வயது வந்தவர்கள் ஆறுதலடைந்தனர். பொல்லுகள் கீழே போடப்பட்டன. எல்லோரும் கதைக்க ஆரம்பித்தனர்.





குடியேறியவர்களுக்கு வேண்டிய உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக முயற்சிப்பதற்கு அதிகாரிகளுடன் பேசப் போவதாக கிராம உத்தியோகத்தர் வாக்களித்தார். இதற்கிடையில் இரு குழுக்களும் ஒன்று சேர்ந்து வாழுவதற்கும் ஒன்றுக் கொன்று உதவுவதற்கும் கற்றுக் கொள்ளுதல் வேண்டும்.



அன்று தொடக்கம் மீனாவின் கிராமாத்தவர்கள் குடியேறியவர்களுக்கு உதவி செய்ய ஆரம்பித்தனர்...



...குடியேறியவர்களும் கிராமத்தவர்களினது வேலைகளுக்கு உதவி செய்யத் தொடங்கினர்.

இவற்றுள் மிகச் சிறப்பாக மாலாவும் ஏனைய பிள்ளைகளும் பாடசாலைக்கு மீண்டும் வந்தனர்.





இத்தொடாகஷிலுள்ள ஏனைய தலைப்புகள்

1. Count Your Chickens
2. Dividing the Mango
3. Will Meena Leave School?
4. Take Care of Girls
5. Who's Afraid of the Bully?
6. Saving a Life
7. Meena's Three Wishes
8. Say No to Dowry
9. Too Young to Marry
10. I Love School
11. It's Got to Be a Boy!
12. Meena in the City
13. A Girl's Story
14. Learning to Love
15. Reaching Out

இவற்றுடன் கிடைக்கக் கூடியன:

* மீனா கல்வி சார் தயாரிப்புகள்
* வீடியோ நாடாக்கள்
* வானொலி தொடர்கள்

பதிப்புரிமை@2003

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ள :
நிகழ்சிதிட்ட தொடர்பாடல் பிரிவு,
ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம்,
இல 5, கீதாஞ்சலி இடம்,
காலி வீதி, கொழும்ப - 3,
தொலைபேசி : 2555270
தொலைநகல் : 2551333
மின்னஞ்சல் : colombo@unief.org
இணையத்தளம் : www.unicef.org

unicef

Reprinted in Sri Lanka@2006

2006ல் இலங்கையில் மீள்பதிப்புரிமை செய்யப்பட்டது.